

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், நேற்று முன்தினம் (25.7.2025) வருவாய்த் துறையின் சார்பில், கல்லல் ஊராட்சி ஒன்றியம் பலவான் குடி ஊராட்சிக்குட்பட்ட ஆலத் துப்பட்டி கிராமத்தில் இலவச வீட்டுமனை பட்டாக்கான ஆணைகளை பயனாளிக ளுக்கு வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி உட்பட பலர் உள்ளனர்.

### சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது

# சீர்திருத்தம் அல்ல; தேர்தல் முடிவுகளைத் திட்டமிட்டு வடிவமைக்கும் தில்லு முல்லு நடவடிக்கை!

### மக்களாட்சி மக்களுக்கே உரியது – அதனை எவரும் களவாட அனுமதிக்க மாட்டோம் என்று கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஜூலை 27-**

**சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR) என்பது சத்தமே இல்லாமல் பின் தங்கிய மற்றும் தங்களுக்கு எதிரான பிரிவினரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கி, தேர்தலில் பா.ஜ.க.வுக்கு சாதகமான சூழலை உருவாக்கும் செயலாகும். இது சீர்திருத்தம் அல்ல; தேர்தல் முடிவுகளைத் திட்டமிட்டபடி வடிவமைக்கும் தில்லு முல்லு நடவடிக்கை என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு :-




சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR) என்பது சத்தமே இல்லாமல் பின்தங்கிய மற்றும் தங்களுக்கு எதிரான பிரிவினரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கி, தேர்தலில் பா.ஜ.க.வுக்கு சாதகமான சூழலை உருவாக்கும் செயலாகும். இது சீர்திருத்தம் அல்ல; தேர்தல் முடிவுகளைத் திட்டமிட்டபடி வடிவமைக்கும் தில்லு முல்லு நடவடிக்கை!

பீகார் மாநிலத்தில் நடந்ததே அனைத்தையும் வெட்டவெளிச்சமாக்கிவிட்டது. முன்பு தங்களுக்கு வாக்களித்த அதே மக்களே கூட இம்முறை நம்மை வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள் என்பதை டெல்லி அணி நன்கு உணர்ந்துள்ளது. அதனால் தான், அவர்கள் வாக்களிக்கவே கூடாது எனத் தடுக்கப் பார்க்கிறது.

எங்களைத் தோற்கடிக்க முடியாது என்ற சூழல் எழுந்தால் எங்களை வாக்காளர் பட்டியலில் இருந்தே நீக்கப் பார்க்கிறீர்கள். நெருப்புடன் விளையாடா தீர்கள். மக்களாட்சிக்கு எந்த வடிவில் அச்சுறுத்தல் நேர்ந்தாலும் அதனை உறுதியாக நின்று எதிர்ப்போம்.

முழு ஆற்றலுடன் தமிழ்நாடு தனது குரலை உரக்க எழுப்பும். இந்த அநீதிக்கு எதிராக ஜனநாயக ரீதியான அத்தனை ஆயுதங்களையும் நாங்கள் அறவழியில் பயன்படுத்துவோம்.

அரசியலமைப்புச் சட்டத்தின் பால் நம்பிக்கை கொண்டுள்ள குடிமக்கள் அனைவருக்கும் சொல்லிக்கொள்வது என்னவென்றால்: S.I.R. என்பது ஒரு மாநிலத்தோடு தொடர்புடையது மட்டுமல்ல, நமது குடியரசின் அடித்தளம் தொடர்பானது. மக்களாட்சி மக்களுக்கே உரியது. அதனை எவரும் களவாட அனுமதிக்க மாட்டோம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### புதிய உறுப்பினர்களுக்கு வாழ்த்து! மாநிலங்களவையில் தி.மு.கழகத்தின் வாதங்களை

# தமிழ்நாட்டின் உரிமைக் குரலை ஓங்கி ஒலிக்கும் நமது எம்.பி.க்கள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூலை 27-**

**"I belong to the Dravidian stock" எனப் பேரறிஞர் அண்ணா முழங்கிய நாடாளுமன்ற மாநிலங்களவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாதங்களை தமிழ்நாட்டின் உரிமைகளை ஓங்கி ஒலிக்கும் நமது எம்.பி.க்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட் டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

"I belong to the Dravidian stock" எனப் பேரறிஞர் அண்ணா முழங்கிய நாடாளுமன்ற மாநிலங்களவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாதங்களை தமிழ்நாட்டின் உரிமைக் குரலை ஓங்கி ஒலிக்கும் நமது எம்.பி.,க்கள்!

திராவிடத் தூணாக முழங்கி விடைபெற்ற அண்ணன் வைகோ அவர்களது உரையில் உள்ளம் உருகி நெகிழ்ந்தேன்!

சண்முகம், எம்.எம்.அப்துல்லா ஆகியோரது பணிகளுக்குப் பாராட்டும் எம்.பி.,யாகத் தொடரும் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், புதிய குரலாக ஒலிக்கவுள்ள அருமை நண்பர் கமல்ஹாசன், எஸ்.ஆர். சிவலிங்கம், கவிஞர் சல்மா ஆகியோருக்கும் வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.





திண்டுக்கல் மாவட்டம் பழனி சட்டமன்றத் தொகுதி கொடைக் கானல் மேல்மலை மன்னவனூர் ஊராட்சி கவுஞ்சி கோணலாறிலிருந்து தண்ணீர் எடுத்து சுத்திகரிக்கப்பட்டு கிராம மக்களின் குடிநீர் பயன்பாட்டுக் காக தமிழ்நாடு வனத்துறை சார்பில் பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார் முயற்சியில் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக கொண்டுவரப்பட்டது. இதில் வனத்துறை அலுவலர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமாருக்கு நன்றி தெரிவித்தனர்.

# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்! நேற்று முன்தினம் (25-7-2025) நிகழ்வுகள்!



**1. கர்ப்பப் பை வாய் புற்று நோய் பரிசோதனை விகிதத்தை அதிகரிக்கவும், விழிப்புணர்வை பரவலாக்கவும் என்ன நடவடிக்கை?**

**கனிமொழி கருணாநிதி கேள்வி**



இந்தியப் பெண்களிடையே கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பரிசோதனை அளவுகள் மிகவும் குறைவாகவே உள்ளன. இதற்கு முதன்மையான காரணம், இதுபற்றிய விழிப்புணர்வு இல்லாததும் இச்சோதனை பரவலாக்கப்படாததும்தான் என்பதை அரசு அறிந்திருக்கிறதா? என்று திமுக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பற்றிய பொதுமக்களின் புரிதலை அரசாங்கம் மதிப்பிட்டிருக்கிறதா? அதுபற்றி மாநில வாரியாக விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் சோதனை செய்து கொள்வதற்கான பரப்புரைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

அசிட்டிக் அமில சோதனை, பாபனிகோலாவ் சோதனை VIA/ Pap சோதனை உள்ளிட்ட சோதனை முறைகளை ஒருங்கிணைத்து கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பரிசோதனைகளை செய்ய ஒன்றிய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா?

சமூக சுகாதார மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்கள், நடமாடும் சோதனை மையங்கள் மூலமாகவும், குறிப்பாக பின்தங்கிய மற்றும் கிராமப்புறங்களிலும் இவற்றை ஒருங்கிணைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைகளுக்கு இணங்க, 30 முதல் 49 வயதுடைய பெண்களில் தேசிய பரிசோதனை விகித்தை தற்போதைய 2 சதவிகிதத்தில் இருந்து குறைந்தது 50 சதவிகிதமாக உயர்த்த அமைச்சகம் காலக்கெடு வைத்திருக்கிறதா? என்று கேள்விகள் கேட்டார் கனிமொழி கருணாநிதி எம்பி.

**2. தேசிய பாதுகாப்பு குறித்து ஊடகங்களின் ஒழுங்குமுறை மீறல்களின்மீது நடவடிக்கை என்ன?**

**திருச்சி சிவா கேள்வி**



சமீபத்திய இந்தியாபாகிஸ்தான் போரின் போது பல செய்தி தொலைக்காட்சிகள் சரிபார்க்கப்படாத மற்றும் தவறாக வழிநடத்தும் தகவல்களை ஒளிபரப்பி மக்களை குழப்பத்திலும் பதட்டத்திலும் ஆழ்த்தியது. அத்தகைய தொலைக்காட்சிகள் மீது ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன என மாநிலங்களவையில் திருச்சி சிவா எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

செய்தி சேனல்களுக்கான ஒளிபரப்பு வழிகாட்டுதல்கள் மற்றும் நிகழ்நேர உண்மை சரிபார்ப்பு வழிமுறைகளை தேசிய பாதுகாப்பு பேரிடர்களின்போது ஒன்றிய அமைச்சகம் ஆய்வுகள் செய்கிறதா?

விதிமுறைகளை மீறியதாகக் கண்டறியப்பட்ட ஒளிபரப்பாளர்களுக்கு கேபிள் தொலைக்காட்சி நெட்வொர்க்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1995 இன் கீழ் ஏதேனும் அபராதங்கள் விதிக்கப்பட்டனவா அல்லது கண்டன அறிக்கைகள் வழங்கப்பட்டனவா?

இனி வரும் காலங்களில் இதுபோன்ற சூழ்நிலைகளில் தொலைக்காட்சி உள்ளடக்கத்திற்கான முன் அறிவிப்புகள் வழங்க அரசிடம் உள்ள திட்டங்கள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**3. கொரோனா வைரஸின் புதிய வகைகள் பரவுகின்றதா?**

**ஆ. இராசா கேள்வி**



2025 கோடை காலத்தில் உலக சுகாதார அமைப்பு (WHO) இந்தியா உட்பட பல நாடுகளில் கொரோனா பாதிப்புகள் திடீரென அதிகரித்துள்ளதாக எச்சரிக்கை விடுத்தளதை குறிப்பிட்டு நாடாளுமன்றத்தில் திமுக நீலகிரி தொகுதி மக்களவை உறுப்பினர் ஆ. இராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

நிம்பஸ் மற்றும் XFG போன்ற சிறப்பு வகைகள் கொரோனாவின் புதிய அலை பரவுவதற்கு முக்கிய காரணம் எனும் செய்தி உண்மையா? அதன் விவரங்கள் என்ன? மற்றும் இத தடுப்பதற்கு மாநில அரசுகளுக்கு ஆலோசனைகளை வழங்குதல் உட்பட அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட செயல் திட்டம் குறித்த விவரங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**4. இந்தியா-பாகிஸ்தான் போர்நிறுத்தத்திற்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப்தான் காரணமா?**

**செல்வகணபதி கேள்வி**



பாகிஸ்தானுக்கு எதிரான போரில் மூன்றாவது நாளின் இறுதியில் இந்திய ஆயுதப்படைகள் முதலிடத்தில் இருந்தபோது, இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையி லான போர் திடீரென நிறுத்தப்பட்டது. இதற்கு அமெரிக்காவின் தலையீடுதான் காரணம் எனும் செய்திகள் உண்மையா என நாடாளுமன்றத்தில் திமுக மக்களவை உறுப்பினர் செல்வகணபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போர்நிறுத்தம் அறிவிக்கப்படுவதற்கு முன்பு அமெரிக்காவுடன் ஏதேனும் உயர் மட்டக் கூட்டம் நடத்தப்பட்டதா, அப்படியானால், சந்திப்பின் முக்கிய புள்ளிகள் என்ன?

மே 2025 அன்று இந்தியபாகிஸ்தான் போர்நிறுத்தத்தில் அமெரிக்க அரசாங்கம்/ஜனாதிபதி ஏதேனும் பங்கு வகித்தாரா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

ஒருவேளை இல்லையென்றால், அத்தகைய தவறான வதந்திகள் குறித்து ஒன்றிய அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

பாகிஸ்தானுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இந்தியாவின் ஒப்பந்தத்தைப் பெறுவதற்கு அமெரிக்கா வர்த்தக வரிச் சலுகைகளை காரணம் காட்டியது என்பது உண்மையா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

மேலும் காஷ்மீர் பிரச்சினையில் மூன்றாம் தரப்பு பரிந்துரைகளுக்கு இந்தியா ஆதரவளிக்கவில்லை என்று அமெரிக்காவிடம் தெரிவிக்கப்பட்டதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

**5. ஆதரவற்ற குழந்தைகளை பாதுக்காக்க நடவடிக்கைஎன்ன?**

**காஞ்சிபுரம் ஜி.செல்வம் – திருவண்ணாமலை சி.என்.அண்ணாதுரை கேள்வி**





நாடு முழுவதும் உள்ள ஆதரவற்ற குழந்தைகளின் நலன் மற்றும் மறுவாழ்வுக்காக ஏற்படுத்திய மிஷன் வத்சல்யா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து நாடாளுமன்றத்தில் திமுக மக்களவை உறுப்பினர்கள் ஜி. செல்வம் மற்றும் சி. என். அண்ணாதுரை கேள்வி எழுப்பியுள்ளனர். அதன் விவரங்கள் பின்வருமாறு:

இத்திட்டத்தின் நோக்கங்கள், முக்கிய கூறுகள் யாவை? குழந்தை பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் வளர்ச்சியை உறுதி செய்ய எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன?

குழந்தைப் பாதுகாப்பிற்கு முன்னு ரிமை அளிக்க வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகள் என்ன? கடந்த மூன்று ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் இந்த திட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட மற்றும் வெளியிடப்பட்ட நிதி உதவியின் விவரங்கள் என்ன?

மாநிலங்களில் மாவட்ட வாரியாக, இந்தத் திட்டத்தின் கீழ் பயனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கையை வெளியிடுக

மிஷன் வாத்சல்யாவின் கீழ் பங்குதாரராக செயல்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் வகைகள் என்ன?

**6. உரம் வழங்குவதில் தாமதம் ஏன்? தொடர்ச்சியான கோரிக்கைகளை புறக்கணிக்கிறதா ஒன்றிய அரசு?**

**தமிழச்சி தங்கபாண்டியன் காட்டம்**



2024-25 நிதியாண்டில் மழைக்கால மற்றும் குளிர்கால பயிர்களுக்கான யூரியா மற்றும் NPK எனப்படும் நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் கலவை உரங்களை தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு வழங்குவது குறித்த தகவல்களை தென் சென்னை தொகுதி மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன் நாடாளுமன்றத்தில் கேட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் தேவைக்கு உரங்களை வழங்குவதில் உள்ள பற்றாக்குறைகள் யாவை?

சூறாவளியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு கூடுதல் மானியம் மற்றும் முன்கூட்டியே உரங்களை அனுப்பச் சொல்லும் தமிழ்நாட்டின் கோரிக்கைகளுக்கு இதுவரை பதில்லாதது ஏன்?

யூரியா மற்றும் DAP மீதான விலை ஒழுங்குமுறையின் தற்போதைய நிலை மற்றும் கடந்த ஒரு வருடத்தில் தமிழ்நாட்டில் சிறு விவசாயிகள் மீதான இந்த மாற்றங்களின் தாக்கம் என்ன?

மாநிலத்தில்மானியவிலைஉரங்கள்திசைதிருப்பப்படுவதையோ அல்லது கள்ளச் சந்தைப்படுத்தப்படுவதையோ தடுக்க ஏதேனும் கண்காணிப்பு வழிமுறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளதா? அப்படியானால், அவற்றின் விவரங்கள் என்ன? என்று பல்வேறு கேள்விகளை அவர் முன்வைத்துள்ளார்.

**7. மக்கள் மருந்தகத்தின் மருந்துகள் தரமானவையா?**

**கள்ளக்குறிச்சி மலையரசன் கேள்வி**



பிரதமரின் மக்கள் மருந்தகம் திட்டத்தின் கீழ் மக்களுக்கு வழங்கப்படும் பொது மருந்துகளின் பட்டியலை வெளியிடச் சொல்லி கள்ளக்குறிச்சி மக்களவை உறுப்பினர் மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன் விவரம்:

பொதுமக்களிடையே, குறிப்பாக கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் பொது மருந்துகளின் நன்மைகள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் என்ன? பொது மருந்துகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதில் அரசாங்கம் எதிகொண்ட சவால்கள் என்ன? மற்றும் அவற்றைச் சமாளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

தமிழ்நாட்டில் திறக்கப்பட்டுள்ள மக்கள் மருந்தகத்தின் மொத்த எண்ணிக்கை மற்றும் நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் நிறுவ இலக்கு வைக்கப்பட்ட மையங்களின் எண்ணிக்கை என்ன?

மக்கள் மருந்தகம் திட்டத்தின்கீழ் உயிர்காக்கும் அல்லது விலையுயர்ந்த மருந்துகளைச் சேர்க்க அரசாங்கம் வகுத்துள்ள திட்டங்கள் என்ன?

மக்கள் மருந்தகங்களில் விற்கப்படும் பொது மருந்துகளின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

**8. இந்தியாவின் சுகாதார உள்கட்டமைப்பை மேம்படுத்துவது எப்போது?**

**வேலூர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!**



இந்தியாவின் சுகாதார உள்கட்டமைப்பு WHO விதிமுறையான 1,000 பேருக்கு 3.5 படுக்கைகள் என்ற அளவைவிட மிகக் குறைவாக உள்ளது ஏன் என வேலூர் தொகுதி மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள மக்கள்தொகைபடுக்கை விகிதத்தின் விவரங்களை மாநில வாரியாக வெளியிடுக.

நோயாளிமருத்துவர் விகிதத்தில் WHO விதிமுறைகளுக்கு இணங்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

நோயாளிசெவிலியர் விகிதம், நாட்டில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் படுக்கைகள்மருத்துவ விகிதம் மற்றும் இது தொடர்பாக அனைத்து ஒன்றிய அரசின் திட்டங்கள் மற்றும் ஒன்றியமாநில அரசுகளின் கூட்டுத் திட்டங்களுக்கும் நிதி உதவியை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**9. பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யுமா ஒன்றிய அரசு?**

**பொள்ளாச்சி கே.ஈஸ்வரசாமி – ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி**





பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தும் பெண்களின் பாதுகாப்பு குறித்து கேள்வி எழுப்பிய திமுக மக்களவை உறுப்பினர்கள் கே இ பிரகாஷ் மற்றும் கே. ஈஸ்வரசாமி ஆகியோர் அதற்குரிய நிர்பயா திட்டத்தின்கீழ் உள்ள நிதியை முறையாக பயன்படுத்துவது குறித்து கேள்வி எழுப்பியுள்ளனர்.

நிர்பயா நிதியின் கீழ் நாடு முழுவதும் அதன் தொடக்கத்திலிருந்து ஒதுக்கப்பட்ட, வெளியிடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன?

மாநில/யூனியன் பிரதேச வாரியாக, திட்டம் வாரியாக, ஆண்டு வாரியாக, அமைச்சகம்/துறை/செயல்படுத்தும் நிறுவனம் வாரியாக, பொது இடங்கள் மற்றும் போக்குவரத்தில் பெண்கள் பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன?

மேற்கூறிய காலகட்டத்தில் நிர்பயா நிதியின் கீழ் அனுமதிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை/வகைகள், அவற்றின் தற்போதைய செயல்படுத்துதல் நிலை என்ன?

வருடாந்திர பட்ஜெட்டில் இத்திட்டத்திற்கு ஒரு தனி பிரிவை அரசு உருவாக்கியுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?

நிர்பயா நிதியின் பயன்பாடு மற்றும் செயல்திறன் குறித்து அமைச்சகம் ஏதேனும் மதிப்பாய்வு மேற்கொண்டுள்ளதா, அப்படியானால், அதன் செயல்படுத்துதலை மேம்படுத்த எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் என்ன?

அந்த நிதித் திட்டங்களினால் பெண்கள் பாதுகாப்பில் விளைந்த முன்னேற்றம் மற்றும் நிதி முன்னேற்றத்தைக் கண்காணிக்க அரசாங்கம் ஏதேனும் வழிமுறையை முன்மொழிந்துள்ளதா? அதன் விவரங்கள் என்ன?

**10. தமிழ்நாட்டு மீனவர்களை மீட்பது எப்போது?**

**கோவை கணபதி ராஜ்குமார் கேள்வி**



வெளிநாட்டு சிறைகளில் குறிப்பாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள இந்தியர் களின் நிலை குறித்து திமுக கோவை மக்களவை உறுப்பினர் கணபதி ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களின் மீன்பிடி படகுகளின் நிலை என்ன? மேற்கூறிய காலகட்டத்தில் இலங்கையிலிருந்து விடுவிக்கப்பட்ட மொத்த மீனவர்கள் மற்றும் படகுகளின் எண்ணிக்கை என்ன? இன்னும் இலங்கை சிறைகளில் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 29 மீனவர்களின் நிலை என்ன?

மேலும் இவர்கள் அவைவரையும் மீட்க ஒன்றிய அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?